**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண்.54/2014**

**இ.ம.எண்.07/2026 in இ.ம.எண்.6/2025**

கமலம் **...மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) அலமேலு (இறப்பு)

2) சரவணன்

3) மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்

4) வட்டாட்சியர், குளித்தலை.

5) கிராம நிர்வாக அலுவலர், மருதுார் வடக்கு II கிராமம்.

6) ராஜ்குமார்

7) தங்கதுரை **..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 27.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.விஜயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டநிலையிலும், 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 2, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.மலர்க்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைக் சட்டம் கட்டளை 6, விதி 17 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால், மேற்படி இடைக்கால மனுவில் உள்ள சங்கதிகளை திருத்தம் செய்யக் கோரி அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில், முன்னிலையாகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், 3 முதல் 5 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரை இல்லை என்று குறிப்பு செய்துள்ளார்.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**3)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி அலமேலு என்பவர், கடந்த 24.10.2025ம் தேதி இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகளாக அவரது மகள்கள் லோகாம்பாள் மற்றும் பேபியும் மற்றொரு இறந்து போன மகன் செல்வக்குமாரின் மகனான சரவணன் ஆகியோர்களை வாரிசுகளாக சேர்ப்பதற்கு, மேற்படி அசல் வழக்கில் இ.ம.எண்.6/2025 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி மனுவிற்கு, 1 முதல் 3 வரையான உத்தேச தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில், 1ம் பிரதிவாதியின் இறந்து போன மகன் செல்வக்குமாருக்கு சாவித்ரி என்ற மனைவியும் மற்றும் பொன்மணி, மஞ்சுளா ஆகிய மகள்களும் வாரிசுகளாக உள்ளதாகவும், அவர்களை இந்த தாவாவில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று எதிர்மனுவுரை தாக்கல் செய்துள்ளார்கள். ஆகவே, மேற்படி நபர்களையும் வாரிசுகளாக சேர்ப்பதற்கு மேற்படி இ.ம.எண்.6/2025 வாரிசு மனுவை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி, திருத்தம் செய்ய வேண்டியது நியாயத்தின் பொருட்டு அவசியமானதாக உள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு அதிகப்படியான

கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**4)** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு தவறு. மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல. மனுதாரரின் மனு எடுத்த எடுப்பிலே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகளில் இந்த 2ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**5)** மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தாவா 1ம் பிரதிவாதி கடந்த 24.10.2025ம் தேதி இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகளாக மகள்கள் லோகாம்பாள் மற்றும் பேபியும் மற்றொரு இறந்து போன மகன் செல்வக்குமாரின் மகனான சரவணன் ஆகியோர்களை வாரிசுகளாக சேர்ப்பதற்கு இ.ம.எண்.6/2025 என தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி மனுவில் 1 முதல் 3 வரையான உத்தேச தரப்பினர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில் 1ம் பிரதிவாதியின் இறந்து போன மகன் செல்வக்குமாருக்கு சாவித்ரி என்ற மனைவியும் மற்றும் பொன்மணி, மஞ்சுளா ஆகிய மகள்கள் வாரிசுகளாக உள்ளதாகவும், அவரை மேற்படி அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று எதிர்மனுவுரை தாக்கல் செய்துள்ளார்கள் என கூறியுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

**6)** ஆனால், மேற்படி 1ம் பிரதிவாதியின் மகன் இறந்து போன செந்தில்குமார் மகன் சரவணன் என்பவர் அசல் வழக்கில் ஏற்கெனவே 2ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி, 2ம் பிரதிவாதி சரவணன் என்பவரை இறந்து போன 1ம்

பிரதிவாதிக்கு வாரிசுகளாக சேர்க்க வேண்டிய இ.ம.எண்.6/2025 என்ற எண்ணில் வாரிசு விவரத்தில் மீண்டும் மூன்றாவது உத்தேச தரப்பினராக காட்டியுள்ளது தவறு என இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில், ஏற்கெனவே ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆட்சேபனையை நீக்கரவு செய்ய இந்த மனுவில் எவ்வித அனுமதியும் மனுதாரர் தரப்பில் கேட்கவில்லை. இது சட்டப்படி தவறு. மேலும், மேற்படி இடைக்கால மனுவில் உள்ள அனைத்து தரப்பினர்களையும் இம்மனுவில் சேர்க்கவில்லை. மேலும், மேற்படி இடைக்கால மனுவில் திருத்தம் செய்ய வேண்டிய விவரத்தில் 8 முதல் 10 என்பதை 8 முதல் 13 வரை என பிரமாண வாக்குமூலத்திலும் திருத்தம் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது தவறாகும். மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் இதர சங்கதிகள் மறுக்கப்படுகின்றது. எனவே, மனுதாரரின் இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**7)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**8)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**9)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியாகிய அலமேலு என்பவர், கடந்த 24.10.2025 அன்று இறந்துவிட்டதாகக் கூறி வாதி தரப்பு வழக்கறிஞரால், கடந்த 27.10.2025ம்

தேதியன்று இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, பின்பு இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டி, மேற்படி அசல் வழக்கில் இ.ம.எண்.6/2025 மனுவானது, வாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருப்பது தெரிகிறது. இந்நிலையில், மேற்படி இடைக்கால மனுவில், 1 முதல் 3 வரையான உத்தேச தரப்பினரான இறந்து போன அலமேலுவின் வாரிசுகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையில் இறந்துபோன 1ம் பிரதிவாதியாகிய அலமேலுவின் இறந்துபோன மகனான செந்தில்குமாருக்கு சாவித்ரி என்ற மனைவியும் மற்றும் பொன்மணி, மஞ்சுளா ஆகிய மகள்களும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றும், அவர்களை மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது அவசியம் என்று கூறி, மேற்படி எதிர்வழக்குரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**10)** எனவே, அதனைத் தொடர்ந்து, மேற்படி இடைக்கால மனுவை திருத்தம் செய்யும் பொருட்டு, இறந்துபோன 1ம் பிரதிவாதியின் இறந்து போன மகனாகிய செந்தில்குமாரின் இதர வாரிசுகளாகிய அவரது மனைவி மற்றும் மகள்களும் மேற்படி இடைக்கால மனுவில் உத்தேச தரப்பினராக சேர்க்க வேண்டி, மேற்படி மனுவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**11)** மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதியின் மகன் இறந்து போன செந்தில்குமாரின் மகனாகிய சரவணன் என்பவர் ஏற்கெனவே அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக உள்ளார் என்றும், மேற்படி சரவணன் என்பவரை மேற்படி இடைக்கால மனுவில் மீண்டும் 3வது உத்தேச தரப்பினராக காட்டியுள்ளது தவறு என்றும், மேற்படி சங்கதிகள் குறித்து இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்கெனவே ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை நீக்கரவு செய்ய இம்மனுவில் எவ்வித அனுமதியும் மனுதாரர் தரப்பில் கேட்கவில்லை என்றும், அது சட்டப்படி தவறு என்றும், மேற்படி இடைக்கால மனுவில் உள்ள அனைத்து

தரப்பினர்களையும் இம்மனுவில் சேர்க்கவில்லை என்றும், மேற்படி இடைக்கால மனுவின் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது தவறு என்றும், எனவே, மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவை நீக்கரவு செய்ய வேண்டியும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**12)** இரு தரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும், இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொண்டபடி இறந்து போன 1ம் பிரதிவாதியின் மகனாகிய இறந்து போன செல்வக்குமாருக்கு மனைவி மற்றும் மகள்கள் வாரிசுகளாக உள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி இறந்து போன செல்வக்குமாரின் மகனாகிய சரவணன் என்பவர் மேற்படி அசல் வழக்கில் ஏற்கெனவே 2ம் பிரதிவாதியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 1ம் பிரதிவாதி இறந்து விட்ட நிலையில், அவரது வாரிசான அவரது இறந்து போன மகனான மேற்படி செந்தில்குமாரின் வாரிசுகளை மேற்படி இடைக்கால மனுவில் சேர்த்து, மேற்படி அசல் வழக்கை மேல் நடத்துவது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**13)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளது போல், மனுதாரர்/வாதியால் மேற்படி இடைக்கால மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரால் எவ்வித திருத்தமும் மேற்கொள்ள இயலாது. மாறாக, மனு விவரத்தில் கண்டுள்ள திருத்தல் விவரங்களில் மட்டுமே மனுதாரரால் திருத்தங்கள் மேற்கொள்ள இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றத. மேலும், மேற்படி சரவணன் என்பவர் இறந்து போன செந்தில்குமாரின் மகன் என்றும், அவர் ஏற்கெனவே 2ம் பிரதிவாதியாக மேற்படி அசல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அவரை மீண்டும் மேற்படி இடைக்கால

மனுவில் 3ம் உத்தேச தரப்பினராக காண்பிக்கப்பட்டுள்ளது தவறு என்றும், அதை நீக்கரவு செய்ய மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து இம்மனுவில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கமுடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி சங்கதிகளை பொறுத்து மேற்படி இடைக்கால மனுவில் மட்டுமே இந்நீதிமன்றத்தால் இரு தரப்பினர்களுக்கும் வாய்ப்பு அளித்து அதனை பொருட்டு தீர்மானம் செய்ய முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**14)** இறந்து போன 1ம் பிரதிவாதியின் மகனாகிய செந்தில்குமார் என்பவர் இறந்து விட்டார் என்பது இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில், இறந்து போன மேற்படி செந்தில்குமாரின் சொத்துக்களைப் பொறுத்த உரிமையானது, மேற்படி இறந்து போன செந்தில்குமாரின் வாரிசுகளையே சாரும் என்பதால், மேற்படி இறந்து போன செந்தில்குமாரின் வாரிசுகளாகிய அவரது மனைவி மற்றும் மகள்களையும் மேற்படி இடைக்கால மனுவில் உத்தேச தரப்பினர்களாக சேர்ப்பது நீதியின் பொருட்டு அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்சொன்ன காரணங்களுக்காக நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.03 16:28:18 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.03 16:28:23 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**